| Scale | E | Tempo | 125 | Style | Ballroom> Schlager Rumba |
|---|---|---|---|---|---|

25. உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை

உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை (பிலி 3:10)
உயிர்பித்ததே பரிசுத்தர் கூட்டம் (மத் 27:52)
உலர்ந்த எலும்புகள் உயிரடைந்திடவே
உன்னத வல்லமை நாடிடுவோம் (ஏசா 37:4)

பல்லவி

வல்லமை உன்னத வல்லமை
உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை
கன்மலை பிளக்கும் வல்லமை – நம்மை
கனிவோடணைத்திடும்

1

அழிவுள்ளதாய் விதைத்ததையோ
அழிவில்லாததாய் எழுப்பிடுமே
கனவீனமுள்ளதாய் விதைத்ததையோ
மகிமையுள்ளதாய் எழுப்பிடுமே (2)
பெலவீனமுள்ளதாய் விதைத்ததையோ
பெலமுள்ளதாய் எழுப்பிடுமே
ஜென்ம சரீரமாய் விதைத்ததையோ
ஆவியின் சரீரமாய் எழுப்பிடுமே(1கொரி 15:42-44)– வல்லமை

2

எக்காள தொனி கேட்க்கும் போது
மறித்தோரை உயிர்ப்பிக்கும் வல்லமை
உயிரோடிருக்கும் பரிசுத்தர் கூட்டம்
மறுரூபமாக்கும் வல்லமையன்றோ (2)
சாவுக்கேதுவான சரீரமோவென்றால்
சாவாமையை தரித்துக்கொள்ளும்
மரணமே உன் கூர் எங்கே? என்று
மரணம் ஜெயத்தால் விழுங்கப்படும்(1கொரி15:52-54)-வல்லமை